★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: பங்குனி 11உ சனி (24—3—56) ★ ★ வெளியூர்: பங்குனி 12உ ஞாயிறு (25—3—56) [இதழ் 241

பள்ளி நேரத்தில் குழந்தைகளை வேறு வேலையில் ஈடுபடுத்தினால்!

ரூ. 25 வரை அபராதம் விதிக்கப்படுவர்

போபால் சட்டசபை, பெரும் அளவு 'மெஜாரிடி'யுடன், 6 வயதுமுதல் 14 வயதுவரை உள்ள குழந்தைகளுக்குக் கட்டாய இலவசத் துவக்கக் கல்வி கற்பிப்பதற்கான மசோதாவை நிறைவேற்றியிருக்கிறது. பள்ளி நேரத்தின்போது ஒரு குழந்தையை வேறு வேலையில் ஈடுபடுத்துவோருக்கு ரூ. 25 வரையில் அபராதம் விதிக்கப்படக்கூடும்.

மாநிலப் புது அமைப்பு மசோதா

மக்கள் கோரிக்கைகள் புறக்கணிப்பு

'சட்டசபை உறுப்பினர்களே! தமிழ் நாட்டின் உரிமைக்குப் போராடுவீராக'

எல்லா தொகுதி பொதுமக்களும் உறுப்பினர்களுக்கு உணர்த்துமாறு வேண்டுகோள்

சர்வ கட்சிக் கூட்டணி முடிவுகள்

சென்னை, மார்ச் 24—

மாநில புது அமைப்பு மசோதா குறித்து கூட்டணி உறுப்பினர்கள் விவாதித்த பின்னர், கீழ்க்கண்ட முடிவுகள் செய்யப்பட்டன :—

1. மார்ச் 28, 29, 31 ஆகிய தேதிகளில் சென்னை சட்டசபையில் விவாதத்திற்கு வரும் இராஜ்யப் புனரமைப்பு மசோதாவை சர்வ கட்சிக் கூட்டணி பரிசீலனை செய்தது :—
   (அ) சென்னை இராஜ்யம் தமிழ் நாடு எனப் பெயரிடப்படவேண்டுமென்று பொது மக்கள் தெரிவித்துள்ள கோரிக்கை புறக்கணிக்கப்பட்டிருக்கிறது
   (ஆ) புதியதாக அமைக்கப்படவிருக்கும் தமிழ்நாட்டின் எல்லைகள் ஜனநாயகத்திற்குப் புறம்பான முறையில் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன.
   (இ) மூன்று ஆண்டுகளாக சர்க்காரால் பல சமயங்களில் உறுதியளிக்கப்பட்ட ஆந்திரா—தமிழக எல்லை நிர்ணயம் குறித்தும் மசோதாவில் திட்டவட்டமான வழிவகை காணப்படவில்லை.
2. மேற்குறிப்பிட்டுள்ள குறைகள் நீங்கும் வகையில் புதியதாக அமையவிருக்கும் இராஜ்யத்திற்கு 'தமிழ் நாடு' என்று பெயரிடவும், தமிழ் நாட்டின் எல்லைகள் தமிழகத்துடன் சேர்க்கப்படுவதற்கு ஜனநாயக முறையில் உடனடி நடவடிக்கை எடுப்பதற்கான வழிவகைகள் மசோதாவில் இடம்பெறச் செய்யவும் சென்னை சட்டசபை உறுப்பினர்கள் அனைவரும் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமாறு சர்வகட்சிக் கூட்டணி கேட்டுக்கொள்ளுகிறது.
3. மேற்கண்ட கோரிக்கைகள் சென்னை சட்டசபையில் நிறைவேறுவதற்கு ஆவன செய்யுமாறு, தமிழகத்திலுள்ள எல்லாத் தொகுதி பொதுமக்களும், அந்தந்த சட்டசபை உறுப்பினர்களை நேரிலோ, அல்லது தந்தி - தபால் மூலமோ உடனே வற்புறுத்துமாறு சர்வ கட்சிக் கூட்டணி கேட்டுக்கொள்ளுகிறது.

சென்னை சட்டசபையில் விவாதத்திற்கு வரும் ராஜ்யப் புனரமைப்பு மசோதா குறித்து பரிசீலனை செய்ய சர்வ கட்சிக் கூட்டணி 23—3—56 பிற்பகல் 4-மணிக்கு அதன் அலுவலகத்தில், கூட்டணி அமைப்புச் செயலாளர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமையில் கூடிற்று.

கூட்டுச் செயலாளர்கள் எஸ். சி. சி. அந்தோணி பிள்ளை எம். எல். ஏ, என். வி. நடராசன், ஏ. சுப்பிரமணியம் ஆகியோரும் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், கே. விநாயகம் எம்.எல்.ஏ., எஸ், சுயம்பிரகாசம் எம்.எல் ஏ, மணலி-கந்தசாமி எம்.எல்.ஏ, ஏ. ரத்தினம் எம் எல்.ஏ, நல்லசிவம் எம். எல். ஏ., சின்னசாமி, கசபதி (நாயகர்) எம் எல்.சி, ஆகிய கூட்டணி உறுப்பினர்களும் வந்திருந்தனர்.

மற்றும், தோழர்கள் கே. எம் கண்ணபிரான், எஸ். தியாகராசன், ரஷீத் ஆகியோர் பார்வையாளராக வந்திருந்தனர்.

நிபந்தனையின்றி உதவி

பாகிஸ்தானுக்குத் தருவதற்கு ரஷ்யா முன்வருமாம்!

எவ்வித நிபந்தனையுமின்றி, பாகிஸ்தானுக்குப் பொருளாதார தொழில் நுணுக்க உதவி தரவும், ஆக்கவேலைகளுக்கு அணுசக்தி உபயோகம் பற்றி கற்றுத்தரவும் சோவியத் அரசாங்கம் தயாராக இருக்கிறதாம்!

அடக்குவார்களாம்-ஒடுக்குவார்களாம்!

கேளாக் காதினரான சென்னை சர்க்கார் மிரட்டுகின்றனர்

மருத்துவமனைத் தொழிலாளர் வேலைநிறுத்தம் கூடாதாம்

தொழிலாளர்கள் தங்களின் நியாயமான குறைகளைப் போக்க வேண்டுமென்று கோரி ஏதேனும் நடவடிக்கையில் ஈடுபடுவதாக அறிவித்தால், காங்கிரஸ் சர்க்கார் உடனே தொழிலாளர் மீது பாய்கிறது; 'அடக்குவோம்—ஒடுக்குவோம்' என்று மிரட்டுகிறது.

சென்னை சர்க்கார் மருத்துவமனைத் தொழிலாளர்கள், தங்களின் நீண்டகாலக் குறைகளை நிவர்த்திக்குமாறு பல வழிகளிலும், சட்ட ரீதியாக சர்க்காருக்கு எடுத்துரைத்திருக்கின்றனர்; என்றாலும், சர்க்கார் கேளாக் காதினராகவே இருந்துவந்தமையால், தங்கள் குறைகளைப் போக்கிக்கொள்ள—குறைந்தபட்ச வாழ்க்கைத் தேவைகளையேனும் பெற—'வரும்' 27-ந் தேதியன்று முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதைத் தவிர வேறு வழி இல்லை; சர்க்கார் அந்த நிலைக்குத்தான் எங்களைத் துரத்துகின்றனர்'—என்று, கடந்த 18-ந் தேதியன்று சர்வகட்சித் தலைவர்களையும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த டாக்டர் பி. வரதராசுலு அவர்களையும் கூட்டிவைத்து, மருத்துவமனைத் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

அதன் பிறகுகூட சர்க்கார் விழித்துக்கொள்ளவில்லை; ஆனால், இப்போது மிரட்டுகிறது—'அடக்குவோம்; ஒடுக்குவோம்'—என்று வீராப்பு பேசுகிறது!

'வெறும் போலி கௌரவத்திற்காகத் தொழிலாளர்தம் நியாயமான கோரிக்கைகளைப் படிப்படியாகவேனும் நிறைவேற்ற சர்க்கார் முன்வர மறுப்பார்களேயானால், அது விவேகமான செயல் அல்ல'—என்று, தி. மு. க. பொதுச் செயலாளர் அவர்கள், அந்தத் தொழிலாளர் கோரிக்கைகளை ஆதரித்துப் பேசுகையில் சர்க்காருக்கு எடுத்துக் கூறினர்.

இப்போது சர்க்கார், 'தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்யக்கூடாது; செய்தால், அதனை அடக்குமுறையால் முறியடிப்போம்,' என்று அறிக்கை விடுத்திருக்கின்றனர்.

"வரும் மார்ச் 27-ந் தேதியன்று மருத்துவமனைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யப்போவதாக சர்க்காருக்குத் தெரிய வருகிறது.

"அன்று வேலைக்கு வராமலிருக்கும் தொழிலாளர்மீது சர்க்கார், தகுந்த ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்.

"இந்த வேலை நிறுத்தம் தேவை இல்லாதது.

"வேலை நிறுத்தத்தால், மருத்துவமனை வேலைகள் சிறிதும் தடங்கலின்றி நடைபெற எல்லா முயற்சிகளும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இம்முயற்சிகளைக் குலைப்பதில் எவரேனும் ஈடுபட்டால், அவர்களை உறுதியாக சர்க்கார் அடக்கும்.

"விசுவாசமுள்ள பணியாளர்கள் வேலைக்கு வரவும், வேலையிலிருந்து வீடு திரும்பவும் எல்லாவிதமான பாதுகாப்பும் தரப்படும்.

தவறான எண்ணத்தினால் மேற்கொள்ளப்படும் வேலை நிறுத்தத்தினால், மருத்துவமனையின் வேலைகள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக சர்க்கார் மேற்கொள்ளும் இந்தத் தீவிரமான நடவடிக்கைகளைப் பொதுமக்கள் ஆதரிப்பர் என்றே நம்புகிறோம்.

"இந்த வேலை நிறுத்தம், சமூகத்தில் நோயாளிகளாயிருப்போருக்கு—பிறரது கண்காணிப்பில் இருக்கவேண்டியுள்ளோருக்கு பெருந் தொல்லை தரக்கூடியதாகும்."

—என்றெல்லாம் சர்க்கார், அறிக்கையில் கூறுகின்றனர்.

'சம்பளப் பிரச்சினையில் வேற்றுமை காட்டுவது சட்ட விரோதம்'

ஆணுக்கும்—பெண்ணுக்கும் சமமான ஊதியம் தர மசோதா

புதுடில்லி, மார்ச். 28—

தொழிற்சாலையிலும், இதர நிறுவனங்களிலும் பணியாற்றும் ஆண்களுக்கும்—பெண்களுக்கும் ஒரே வேலையில், ஒரேவிதமான ஊதியம் தரவேண்டுமென்றும், அனுபவம், பொறுப்பு சம்பந்தமாக மாத்திரம் சம்பளத்தில் வேற்றுமை இருக்கலாமென்றும், ஆண்—பெண் என்ற காரணமாகச் சம்பள விஷயத்தில் வேற்றுமை காட்டுவது சட்ட விரோதம் என்றும், மக்கள் சபையில், திருமதி ரேணுகா சக்கரவர்த்தி மசோதா ஒன்று கொண்டு வந்துள்ளார்.

200 'சர்வேயர்'கள் நீக்கப்படுவராம்!

சென்னை சட்டசபையில், பெரும் அளவில் 'சர்வேயர்'கள் வேலையிலிருந்து நீக்கப்படுவதைக் குறித்துக் கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன.

200 'சர்வேயர்'கள்தான் வேலையிலிருந்து நீக்கப்படுகிறார்களென்றும், இவர்கள் பிரச்சினையை சர்க்கார் அனுதாபத்துடன் கவனிக்குமென்றும், வேறு துறைகளில் அவர்களுக்கு வேலை தருவதுபற்றி சர்க்கார் நடவடிக்கை எடுக்குமென்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

காமராசர் ஆட்சியின் பழிவாங்கும் போக்கு!

நிரபராதிகள் மீது வழக்கு

பிப். 20 அர்த்தாலையொட்டி கைது செய்யப்பட்ட தாண்டானூர் தோழர்கள் 25 பேரும் எந்தவிதமான நிபந்தனையுமின்றி விடுதலை செய்யப்பட்டார்கள்.

ஆனால் எதிர்பாராதவிதமாக அவ்வூரைச் சேர்ந்த தி. மு. க. தோழர்களான டி. எம். மாணிக்கம், பி. துளசி ஆகியோர்மீது இ. பி. கோ. 341-வது பிரிவின்கீழ வழக்குத் தொடரப்பட்டு சம்மன் அனுப்பப்பட்டது. தோழர்கள் இருவரும் 23-3-56 காலை 11-மணிக்கு ஆத்தூர் சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஆஜரானர்கள்.

மாஜிஸ்திரேட் அவர்களை விசாரித்ததற்கு, 'தாங்கள் குற்றவாளிகள் அல்ல' என்று தோழர்கள் வாதாடினர்.

பின்பு வழக்கு 4-4-56-ந் தேதி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக மாஜிஸ்திரேட் அறிவித்தார்.

இவ் வழக்கைக் கவனிப்பதற்காக தி. மு. க. தோழர்களும், பொது மக்களும் நீதி மன்றத்தில் நிறைந்திருந்தனர்.

சர்க்கார் அலுவலகத்தில் இருந்த தேசீயக் கொடி!

புத்திக்கோளாறுற்ற வாலிபர் இறக்க முயன்றாராம்!

பெங்களூர், மார்ச், 23—

இங்கு பழைய சர்க்கார் அலுவலகத்தில் பறந்து கொண்டிருந்த தேசீயக் கொடியைக் கம்பத்திலிருந்து அகற்றியதாக சுப்பராஜு என்ற ஒரு வாலிபரை போலீசார் கைது செய்திருக்கின்றனராம்.

கடந்த நான்கைந்து ஆண்டுகளாகப் புத்தி சரியாக இல்லாதிருக்கும் அந்த வாலிபர், புதியதாகக் கட்டப்பட்டுவரும் சர்க்கார் அலுவலகத்தில் தேசீயக் கொடியை ஏற்றுவதற்காகவே, பழைய அலுவலகத்தில் பறந்து கொண்டிருந்த கொடியை அகற்ற அந்த வாலிபர் முயன்றதாகப் போலீசார் தெரிவித்திருக்கின்றனர்.

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 24—3—'56 சனி

கடமையாற்ற வேண்டும்

வருகிற திங்கட்கிழமை தினம், சென்னை சட்டசபையில் மாகாண சீர்திருத்த மசோதா விவாதிக்கப்பட இருக்கிறது. சர்வகட்சிக் கூட்டணி வெற்றிகரமாக நிறைவேற்றிய வேலைநிறுத்தத்தை ஒரு அளவுகோலாகக் கொண்டால்தான் சட்டசபை விவாதம் எந்தவகையில் அமைந்திருக்கக்கூடும் என்பதைக் கூடுமானவரை யூகித்து உணருவது சாத்தியமாகும்.

தட்சிணப் பிரதேச அமைப்புக் கருத்தைக் கைவிடல்; தேவிகுளம், பீர்மேடுபோன்ற தமிழ் பகுதிகளைச் சென்னையுடன் இணைத்தல்; சென்னைக்கு தமிழ் நாடு எனப் பெயரிடல்—என்ற கோரிக்கைகளைத் தமிழ் மக்கள் முன்வைத்தே, பொது வேலை நிறுத்தத்தின் மூலம், தங்கள் கருத்தை உணர்த்துமாறு சர்வ கட்சிக் கூட்டணி வேண்டிக் கொண்டது. வேலைநிறுத்தத்தை வெற்றிபெறச் செய்ததின்மூலம், தமிழ் மக்கள் தங்கள் விருப்பத்தைத் திட்டவட்டமாக வெளிப்படுத்திவிட்டார்கள்.

'வேலைநிறுத்தம் வெற்றிபெற்றது எனச் சிலரும்—தோற்றுவிட்டது எனச் சிலரும் கூறுகிறார்கள்; எனவே, அதை ஒரு மக்கள் கருத்தறியும் முறையாகக் கொள்ள முடியாது' என்ற சொத்தை வாதத்தை, பொறுப்பற்ற முறையில் நிதி அமைச்சர் சட்டசபையில் குறிப்பிட்டுள்ளார். அதே நிதி அமைச்சர், 'சட்டசபை கருத்தையே நாட்டு மக்கள் கருத்தாகத் தாம் கொள்ளத் தயார்' எனவும், சட்டசபையில் வேறு ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

பொது வேலைநிறுத்தத்தின் மூலம் வெளியான தமிழ் மக்களின் ஒருமித்தக் கருத்தை, நிதி அமைச்சர் எந்த உள்நோக்கத்துடன் ஏற்க மறுத்தபோதிலும் மறுத்துக்கொள்ளட்டும். அதுபற்றிய ஆராய்ச்சி இப்பொழுது நமக்கு அவசியமில்லை. அவர் குறிப்பிட்டுள்ளபடி சட்டசபை உறுப்பினர்களின் கருத்தையே அவர் பொதுமக்களின் ஒருமனப்பட்ட கருத்தாகவே கொள்ளட்டும்.

சட்டசபை முடிவையே பொதுமக்கள் முடிவாகக் கொள்ள வேண்டும் என்பது நிதி அமைச்சரின் கருத்தாக இருக்கிறது. ஜனநாயக நாட்டில் நடைமுறையில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடும் அதுவேதான் என எதற்காகவோ நமது நாட்டில் ஊதட்டளவில் ஜனநாயகம் பேசிவரும் தேசிய ஏடுகளும், அதற்கு ஒத்து ஊதும்.

சட்டசபை முடிவே பொதுமக்கள் கருத்தாகும் என விரதமாக நிதி அமைச்சர் நியாயம் பேசினாலும், அதுதான் சிறந்த ஜனநாயக சம்பிரதாயம் எனத் தேசிய ஏடுகள் எடுத்துக்காட்டி ஆதரவு காட்டினாலும், அதை அப்படியே ஒப்புக்கொண்டு, சட்டசபை முடிவுகளை செயலாற்றும் பெருங்குணம் காங்கிரஸ் மேலிடத்திற்கு அறவே கிடையாது. சட்டசபை முடிவுகளை, அது எவ்வளவு உயர்ந்த நியாயமாக இருந்தபோதிலும், அவைகளை தூர வீசி எறிந்துவிட்டு, தம் மனம்போன போக்கில் விருப்பு வெறுப்புக்கேற்ப, ஒரு ஏற்பாட்டைத் திணிப்பதே, காங்கிரஸ் மேலிடத்தின் ஜென்மக் கூறுகப்போய்விட்டது. எத்தனையோ சான்றுகளை இதற்கு எடுத்துக்காட்டுகளாக நம்மால் குறிப்பிட முடியும்.

எடுத்துக்காட்டாக, தேவிகுளம்—பீர்மேடு தமிழ்ப் பகுதிகள் சென்னையுடன் இணைக்கப்பட வேண்டும் என்றுதான், ஏற்கனவே சென்னை சட்டசபை தனது முடிவை ஏகோபித்துத் தெரிவித்தது.

அது, தமிழ் மக்களின் ஒருமனமானக் கருத்தாயிற்றே, அதை ஒதுக்கித் தள்ளலாமா, அது அறமாகாதே என, காங்கிரஸ் மேலிடம் எண்ணவா செய்தது? இல்லையே! எடுத்தெறிந்தல்லவா, எதேச்சாதிகாரமாகக் காங்கிரஸ் மேலிடம் நடந்துகொண்டு இருக்கிறது?

தமிழ் மக்களின் ஒருமித்தக் கருத்தை உதறித் தள்ளிவிட்டதே காங்கிரஸ் மேலிடம், தமிழ் குலத்தின் நலன்களை ஒப்புக்கொள்ளாது காங்கிரஸ் மேலிடத்தின் காவலாளியாக இனியும் தம்மால் இருக்க முடியாது; கனக-விசயன் தலையில் கல்லேற்றிவந்தத் தமிழர் குருதிதான் தம் உடலிலும் ஓடுகிறது, எனவே, தமிழருக்கு அநீதி இழைத்த காங்கிரஸ் மேலிடத்திற்குப் புத்தி புகட்டுகிறேன், என்றல்லவா முதலமைச்சர் காமராசர், டில்லி நோக்கி கர்ஜித்திருக்க வேண்டும்?

அவரா செய்வார்? அவரிடத்திலா, இச்சிறிய செயலை நாம் எதிர்பார்ப்பது? அவர் தான் பெரிய கனம் ஆயிற்றே?

காங்கிரஸ் மேலிடம குட்டக் குட்ட குனிந்து கொடுப்பதில் முதலிடம் பெறுவதுதான், தமிழர் வீரம் என எண்ணி மகிழ்ந்து கிடப்பவராயிற்றே? அவராவது, காங்கிரஸ் மேலிடத்தைஎதிர்த்துத்தமிழர்களின் உரிமையைப் பெற முயலுவதாவது?

நிதி அமைச்சரும், தொழில் விவசாய அமைச்சரும் கனக-விசயர் தருக்கடக்கிய தமிழர் சந்ததியினர்தானே, அவர்களாவது சட்டசபை முடிவிற்குக் காங்கிரஸ் மேலிடத்தைப் பணியவைக்க முயலக்கூடாதா எனக் கேட்கும், தமிழ் மகன் எவனும் இருக்கமுடியாது. 'அவரே கூறிவிட்டார்—அடிபணிவதே முறை' என்ற தாசர் தத்துவம் பேசுகின்ற பெருந்தகைகள் அல்லவா, அவர்கள்?

காங்கிரஸ் அரசியலில், முதலமைச்சர் பீடத்திற்கு 'நான் முந்தி நீ முந்தி' எனப் போட்டிப் போட்டுக்கொண்டிருக்கும் அவ்விரு அமைச்சர்களுமா தமிழர்களுக்கு நீதி வழங்குமபடி, காங்கிரஸ் மேலிடத்தைக் கேட்கப் போகிறார்கள்? சுயநலத்தைத் தவிர, அரசியல் வாழ்வில் வேறு ஒன்றும் கிடையாது என்பதைச் சிலை நாட்டிக் காட்டிவிட்டுச் சாகும் நினைப்புடன் பதவியில் இருப்பவர்களல்லவா, அந்தத் திருமேனிகள்? நிற்க.

பொது வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக நிறைவேற்றியதின் மூலம் தமிழ் குலத்தின் உள்ளக் கருத்து, சட்டசபை உறுப்பினர்களுக்கு—அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்—உணர்த்தப்பட்டுவிட்டிருக்கிறது சர்வ கட்சி கூட்டணியால். தமிழ் மக்கள் உள்ளக்கிடக்கையை, சட்டசபை உறுப்பினர்களுக்குப் பசுமரத்தாணி போல் உணர்த்தி இருக்கிறது பொது வேலை நிறுத்தம். அதுவுமன்றி, கூட்டணி மேற்கொண்ட தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்த வேண்டும் என்ற கட்டாயத்தையும், ஊக்கத்தையும் சட்டசபை உறுப்பினர்களுக்குக் கொடுத்திருக்கிறது, பொது வேலைநிறுத்தம்.

இம்மகத்தான உண்மையை, வெளிப்படையாக மறுத்து வரும் காங்கிரஸ் அமைச்சர்கள்கூட, தங்கள் உள்ளத்திற்குள்ளாக நிச்சயமாக ஒப்புக்கொண்டே தீருவார்கள். அமைச்சர்கள் நிலை எதுவானாலும், இவ்வகையில், பெரும்பாலான காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் விஷயத்தில், துளியும் ஐயுற வேண்டிய அவசியமே கிடையாது. அவ்வாறு ஐயுறுவோர் எவரானலும், பொது வேலைநிறுத்தத்தில் வெற்றி பெற்றுள்ளது என அவர் கூறுவதும், வெறும் வெளிப்பகட்டே என ஐயுற வேண்டி வரும்.

தமிழர்களின் கோரிக்கை நியாயமானது, அதை வற்புறுத்த வேண்டியது தங்கள் நீங்காக் கடமை என்ற உறுதியை, காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களுக்கு ஊட்டப் பொது வேலைநிறுத்தம் தவறி இருக்கும்பட்சத்தில், அவர்களிடம் மனமாற்றத்தை உருவாக்க வேறு எந்த அமைதியான ஆர்ப்பாட்டங்களால் தான் முடியக்கூடும்? மகத்தான பொது வேலைநிறுத்தம் சாதிக்கத் தவறியதை, வேறு அமைதியான ஆர்ப்பாட்டங்களா சாதித்துவிடப் போகின்றன?

பொது வேலைநிறுத்தத்தின் மூலம் வெளியான தமிழர்களின் உள்ளக்கருத்தை, அதைப் பெற்று மகிழவேண்டும் என்றப் பெருவிழைவை, மற்ற சட்டசபை உறுப்பினர்களைப் போலவே காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களும் நன்கு உணர்ந்தே இருக்கிறார்கள். எனவே அவர்கள், தமிழ் குலத்துக்குச் சட்டசபை உறுப்பினர்களாக இருந்து ஆற்ற வேண்டிய கடமையை, இது சமயம் தவறிவிடாமல் ஆற்ற வேண்டுமாய் வேண்டிக் கொள்ளுகிறோம்.

சென்னைக்குத் 'தமிழ் நாடு' அல்லது 'தமிழகம்' எனப் பெயரிடுமாறு சிபாரிசு செய்துத் தீர்மானிக்கவேண்டும்.

தேவிகுளம், பீர்மேடு, பாலக்காடு, கொச்சின் சித்தூர், நெய்யாற்றங்கரை ஆகிய தாலுக்காக்களில் தொடர்ந்துள்ளத் தமிழ்ப் பகுதிகளை, சென்னைத் தமிழகத்துடன் இணைக்கவேண்டும் என்று ஒரேகுரல் கொண்டு வற்புறுத்த வேண்டும் என காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களைக் குறிப்பாகவும், மற்ற உறுப்பினர்களைப் பொதுவாகவும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

அடுத்து வரும் பொதுத்தேர்தலையாவது அவர்கள் நினைவுபடுத்திக்கொண்டு, தமிழ் மக்களுக்குத் தாங்கள் புரியவேண்டிய நியாயமானத் தொண்டினை, இந்த ஒரு நெருக்கடியான சமயத்திலாவது புரிய உறுதி கொள்ளும்படி அவர்களை எச்சரிக்கிறோம்.

'டெல்லி நமக்கு மட்டுமே குறிப்பாக அநீதி இழைத்துள்ளது'

'ஆவடியில் கன மின்சாரத் தொழிற்சாலை அமைவதும் 'கோவிந்தா' ஆகிவிட்டது'

சென்னை மேல் சபையில் காங்கிரஸ் உறுப்பினர் சோக கீதம்

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னை மாநிலத்திற்கு--தென்னாட்டிற்கு டெல்லி இழைத்த அநீதியின் கோர உருவம், காங்கிரசாரையும்கூட அச்சுறுத்தியிருக்கிறது. மந்திரி பக்தவத்சலமே மேல் சபையில் அழுது புலம்பியிருக்கிறார், சென்னைத் திட்டத்திற்கு நேர்ந்த கதியின் சோகக் கதையைக் கூறி!

அவரைத் தொடர்ந்து பேசிய தோழர் டி. புருஷோத்தம் (காங்.) அவர்களும், டெல்லியின் அநீதி கண்டு மனம் கோதித்திருக்கிறார். அவர், சென்னைத் திட்டத்திற்கு மட்டுமே குறிப்பாக இந்தக் கதி ஏற்பட்டிருக்கிறது என்று சுட்டிக் காட்டியிருப்பது ஊன்றிக் கவனித்தற்குரியது.

டி. புருஷோத்தம்:

"குறிப்பாக சென்னை மாநிலத்தின் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் கடுமையாக வெட்டப்பட்டு விட்டது. ஆவடியில், ஒரு கனரக மின்சார சாதனத் தொழிற்சாலை அமையும் என்று கூறப்பட்டதும் கூட இப்போது, இல்லை என்றாகிவிட்டது.

"பாதுகாப்பு இலாகாவிற்குச் சொந்தமான ஒரு நிறுவனம்கூட இப்போது ஆவடியிலிருந்து வடநாட்டில் எங்கோ ஒரு இடத்திற்குக் கிளப்பப் படுவதாகத் தெரிகிறது. இதை எதிர்த்து, அந்த நிறுவனம் ஆவடியிலேயே தொடர்ந்து நிலைக்கச் செய்ய வேண்டியது சர்க்காரின் பொறுப்பாகும்.

"புதிய தொழிற் கல்லூரிகள் துவங்கும் திட்டத்தில் மேலும் இரண்டு கல்லூரிகள் சென்னை மாநிலத்தில் துவங்குவதற்கு ஏற்பாடு வேண்டும். இதை டெல்லி சர்க்காருக்கு மாநில சர்க்கார் வற்புறுத்திக் கூறியாக வேண்டும்."

மேலும் தோழர் டி. புருஷோத்தம் அவர்கள், இரண்டாம் திட்டத்தின்கீழ் அமைக்கப்படும் கனரகத் தொழில்கள் சிலவற்றைச் சென்னையில் நிறுவ வேண்டும் என்பதையும் டெல்லி சர்க்கார் கவனிக்க வேண்டும் என்று பொருள் படும் திருத்தம் ஒன்றையும் பிரரேபித்திருக்கிறார்.

5 உப்பு இரசாயன ஆராய்ச்சிச்சாலைகள்

தமிழ் நாட்டில் ஏற்படுமாம்

தமிழ் நாட்டில் திண்டிவனம், அறந்தாங்கி, சீர்காழி, நாகப்பட்டினம், தேவகோட்டை ஆகிய ஐந்து ஊர்களிலும் இந்த ஆண்டில் ஐந்து உப்பு இரசாயன ஆராய்ச்சிச்சாலைகள் ஏற்படும் என்ற தகவலை சென்னை பிரதேச உப்பு இலாகா உதவி கமிஷனர் ஆர். எஸ் லாம்பா என்பார் தெரிவித்திருக்கிறார்.

இந்தக் காரியத்திற்காக ரூ 15,61,950 ஒதுக்கப்பட்டிருப்பதாயும் கூறியிருக்கிறார்.

உப்பின் தரத்தை உயர்த்துவது, உற்பத்தியைப் பெருக்குவது ஆகியவைகள் பற்றி இந்த ஆராய்ச்சிச் சாலைகள், ஆராய்ச்சி நடத்துமாம்.

ஏற்கனவே, வேதாரண்யம், கடலூர், தரங்கம்பாடி, அதிராம்பட்டினம், சிதம்பரம் ஆகிய இடங்களில் அமைந்திருக்கும் இத்தகு ஆராய்ச்சிச்சாலைகளும் அபிவிருத்தி செய்யப்படுமாம்.

சென்னை மாநிலத்திற்கென ஒரு மாதிரி உப்பளம் ஒன்றும், செங்கற்பட்டு மாவட்டத்தில் மகாபலிபுரம் சாலையில் உள்ள செம்மஞ்சேரி கிராமத்தில் அமைக்கப்படும் என்றும் இதற்கு ரூ. 2 இலட்சம் செலவாகும் என்றும் தெரியவருகிறது

136 குடும்பக் கட்டுப்பாடு நிலையங்கள் உள்ளனவாம்!

குடும்பக் கட்டுப்பாட்டின் முக்கியத்துவத்தையும், குடும்பக் கட்டுப்பாடு முறைகளையும் மக்களுக்கு உணர்த்துவதற்காக, இந்தியாவின் பல்வேறு இடங்களிலும் 136 குடும்பக் கட்டுப்பாடு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவாம்!

முதலாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், இந்த நிலையங்களை நடத்துவதற்காகவும், ஆராய்ச்சி வேலை முதலியவைகளை நடத்துவதற்காகவும், மாநில சர்க்கார்கள், ஸ்தல ஸ்தாபனங்கள், தனிப்பட்ட சுயேச்சை நிறுவனங்கள் ஆகியவைகளுக்கு இதுவரையில் மொத்தம் ரூ. 20,27,630 உதவி மானியங்கள் வழங்கப்பட்டுள்ளனவாம்.

காச்சா தீவு யாருக்குச் சொந்தம்?

பாக் ஜலசந்தியில், தனுஷ்கோடிக்கும்—தலைமன்னருக்கு மிடையே உள்ள காச்சா தீவை பீரங்கிப் பயிற்சிக்கும், வெடி விமானப் பயிற்சிக்கும் உபயோகிப்பதென இலங்கை சர்க்கார் தீர்மானித்ததாயும், அந்தத் தீவு யாருக்குச் சொந்தமானது என்பதை அறியும் வரை அதை உபயோகிக்கும் தீர்மானத்தை ஒத்திவைக்குமாறு இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவர் கேட்டுக் கொண்டதாயும் இங்குள்ள இந்தியத் தூதுவராலுவலக அதிகாரி ஒருவர் கூறியதாகத் தெரியவருகிறது.

பரிசீலிக்கட்டும் — நன்றாகப் பரிசீலிக்கட்டும்!

சென்னை நகரில் பஸ் போக்குவரத்தை அபிவிருத்தி செய்வது பற்றி நிபுணர்கள் செய்துள்ள சிபாரிசுகளைச் சர்க்கார் பரிசீலித்துக் கொண்டிருப்பதாக சென்னை மேல்(சட்ட)சபையில் மந்திரி பரமேசுவரன் தெரிவித்திருக்கிறார்.

கழகச் செய்திகள்

புதுக்குளத்தில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

17-3-56 இரவு 8 மணிக்கு தே மூர் வே. வேதமாணிக்கம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் இரா. நல்வினைவேல், சே. அசைலாத், ஜான் டேவிட் ஆகியோர் பேசியபின், தோழர் கே. சேர்மத்துரை தி. மு கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசியதுடன், கழகத்தில் உறுப்பினராக ஒவ்வொருவரும் சேரவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்திப் பேசினர்.

சென்னை 46-வது வட்ட தி. மு. கழகம்

18-3-56 காலை 9-மணியளவில், தோழர் இளம்பரிதி தலைமையில் கழகப் பொதுக் குழு உறுப்பினர் கூட்டம் நடைபெற்றபோது, நடைமுறையிலுள்ள நிர்வாக அமைப்பைக் கலைத்துவிட்டு, தோழர் இரா. அகமழகன்—செயலாளர்; சி என். இராமசாமி—துணைச்செயலாளர்; வை. பிரமய்யா—பொருளாளர்; ஐ. தேவராசன், இராம-வெள்ளையன்—மாவட்டப் பிரதிநிதிகளாகக் கொண்ட புதிய நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது பின்னர், தோழர் இளம்பரிதியும், கழக முன்னாள் செயலாளரும் கழகத் தோழர்களின் கடமை குறித்துப் பேசினர்.

கூடலூர் தி. மு. கழகம்

16—3—56 கூடலூர் (மதுரை மாவட்டம்) தி. மு. கழக அலுவலகத்தில் தோழர் எஸ். டி பகவதிராசு தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. அண்ணா நாடக மன்ற நிதிக்காக புரட்சி நடிகர் எம். ஜி இராமச்சந்திரன் தலைமையில் 'இருளில் ஒளி' என்ற நாடகம் நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

துறையூர் (ரெகுநாயகிபுரம்) தி. மு. கழகம்

15—3—56 மாலை 4 மணிக்கு, பட்டுக்கோட்டை வட்டத்தைச் சேர்ந்த துறையூர் (ரெகுநாயகிபுரம்) தி. மு. கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் தோழர் அ. ராமையன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சி. பி. சிற்றரசு, கே. அடைக்கலம், பி. வடிவேலு, கே. எஸ். எம். கலாநேசன், எம். கிருட்டிணமூர்த்தி, எம். ஆர். கோவேர்தன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன

அய்யம்பாளையம் தி. மு. க.

20—3—56 இரவு 8 மணிக்கு தோழர் வை. செல்லப்பன் இல்லத்தில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில், செயலாளர் அ. கு பழனிச்சாமி அவர்களின் விலகுதலை ஒப்புக்கொண்டதுடன், தோழர்கள் எ. கே கண்ணப்பன் செயலாளராகவும், எ வி. செல்லப்பன் துணைச் செயலாளராகவும், ப கிட்டப்பன் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஆமதாபாத் நகர தி. மு. க. பொதுக் குழு

18–3–56 பிற்பகல் 3 மணிக்கு பழைய முனிசிபல் சால், ஏ-23, இரா. வைத்திலிங்கம் இல்லத்தில், தோழர் இரா தணிகாசலம் அவர்கள் தலைமையில் நடைபெற்றபோது, வரவு-செலவு கணக்குகள் சரிபார்த்து ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், கழக வளர்ச்சிக்கு நிதி சேர்ப்பதெனவும், கழக ஆண்டு விழா, மே தின விழாக்களை மே திங்களில் கொண்டாடுவதெனவும் முடிவு செய்யப்பட்டதுடன், தீர்மானங்கள் சில நிறைவேற்றப்பட்டது

செய்திச் சுருள்

★

மணப்பாறை தி. மு. கழக மாணவர் கிளைப் பொதுக்கூட்டம்

17—3—56 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு, தி. மு. கழக மாணவர் கிளையின் சார்பில், தோழர் மா. இளங்கீரன் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் கண்ணதாசன், காசிநாதன், என். வடிவேலன், பொ. மதிவாணன், நா சக்ரபாணி, தெக்கூர் மணிமாறன் ஆகியோர் 'மாணவரும் தற்கால அரசியலும்' என்பது பற்றிப் பேசினர்.

'அண்ணா உணவகம்'

17—3—56 இரவு சுமார் 9 மணிக்கு, கரூர் டவுன், திண்டுக்கல் ரோடில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள 'அண்ணா உணவகத்'துக்கு அண்ணா அவர்கள், கரூர் தோழர்கள் சோமு, குழந்தைவேல் ஆகியோருடன் வருகை தந்தார்.

உணவக உரிமையாளரும், செயலாளரும் அனைவரையும் வரவேற்று மாலையிட்டு, நிழற்படம் எடுத்து, விருந்திட்டு வழியனுப்பினர்.

'உணவகம்' சிறந்து வளர ஆலோசனைகள் பல அண்ணா அவர்கள் கூறினர்.

சென்னை முத்தமிழ் மன்றம்

12—3—56 இரவு 6-30 மணியளவில், மன்றப் பணிமனையில் தோழர் முத்தமிழ் மணி தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது, ஜூன் 2-வது வாரத்தில் மன்ற 2-வது ஆண்டு விழாவை நடத்துவதென முடிவு செய்யப்பட்டு, தீர்மானமொன்றும் நிறைவேற்றப்பட்டது.

டாக்டர் அம்பேத்கார் படிப்பகம்

சென்னை—சின்ன செம்பரம்பாக்கம், டாக்டர் அம்பேத்கார் படிப்பக உறுப்பினர் கூட்டம் தோழர் டி. வரதராசன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் டி. வி. ராசனைத் தலைவராகவும், ஈ. ஜி. சேகரை செயலாளராகவும் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

'தகராறுகளை தீர்க்க எல்லைக் கமிஷன் வேண்டும்'

'ஆந்திரப் பிரதேசம் எனப் பெயர் மாற்றம் தேவை'

சர்வகட்சித் தலைவர்கள் கோரிக்கை

"அண்டை மாநிலங்களுடன் ஆந்திர மாநிலத்திற்கு உள்ள எல்லைத் தகராறுகளைத் தீர்த்துவைக்க, ஒரு எல்லைக் குழுவை டெல்லி சர்க்கார் நியமிக்க வேண்டும்,"

என்று, ஆந்திர முதன் மந்திரி உள்ளிட்ட சர்வ கட்சியினர் கலந்துகொண்ட கூட்டம் ஒன்றில் கோரப்பட்டிருக்கிறது.

'ஆந்திரா—தெலிங்கானா' என்ற பெயரை 'ஆந்திரப் பிரதேசம்!' என்று அழைக்கவேண்டும் என்பதாக, எல்லா ஆந்திர அரசியல் தலைவர்களும் கூடிய அந்தக் கூட்டம் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

மாநில புது அமைப்பு மசோதாவில், 'ஆந்திரா — தெலிங்கானா' என்று டெல்லி பெயரிட்டிருக்கிறது.

"இந்தப் பெயர், ஆந்திரர்களை ஒற்றுமைப்படுத்த உதவாது; 'விசால ஆந்திரம் வேண்டும்' என்று கோரப்பட்டதின் நோக்கத்தை ஈடேற்றாது,"

என்று, சகல கட்சித் தலைவர்களும் கூறியிருக்கிறார்கள்.

வரும் 1957-ல் தெலிங்கானா பகுதியில் மட்டுமே பொதுத் தேர்தல் நடைபெறும் என்று சூசகமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் ஆந்திரத் தலைவர்கள், 'புதிய மாநிலம் முழுவதற்கும் தேர்தல் நடத்திவிட வேண்டும்' என்றும் கருத்தறிவித்திருக்கின்றனராம்.

'புதிய மாநிலத்தின் உயர் நீதிமன்றம், ஐதராபாத் நகரிலேயே இருக்கவேண்டும்; அதன் கிளைகள் வேறெங்கும் இருக்கக்கூடாது,'

என்றும், தலைவர்கள் கருதுகின்றனராம்.

முன்னாள் முதன் மந்திரி டி. பிரகாசம், முதன் மந்திரி கோபால ரெட்டி, துணை முதன் மந்திரி சஞ்சீவ ரெட்டி, உதவி சபைத் தலைவர் கல்லூர் சுப்பாராவ், கம்யூனிஸ்டு தலைவர் பி. சுந்தரையா, தேசியக் கட்சித் தலைவர் பி. இராமகிருஷ்ண ராஜு, சோஷலிஸ்டு தலைவர் பி.வி.ஜி ராஜு, விசால ஆந்திர மகா சபைத் தலைவர் ஏ. காளேசுவரராவ், பிரஜா-கட்சித் தலைவர் டாக்டர் இராஜேசுவரராஜு, மற்றும் பலர் கலந்து கொண்டிருக்கின்றனர்.

கூட்டத்தில் மேற்கொண்ட முடிவுகளைக் குறித்து, தெலிங்கானா தலைவர்களின் கருத்தையும் அறியவேண்டும் என்று கோரப்பட்டிருக்கிறது.

குறிப்பு:—'எல்லைத் தகராறுகளைக் கவனிப்பதற்காக ஒரு எல்லைக் குழு அமைக்கவேண்டும் என்ற கருத்தில், சென்னை, திரு-கொச்சி அரசாங்கங்களிடையே உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது' என்று, ஆந்திர முதன் மந்திரி கோபால ரெட்டியார், சட்ட சபைக் கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

மீண்டும் அணுகுண்டு பரிசோதனை

வாஷிங்டன், மார்ச் 22—

கடந்த சில நாட்களுக்குமுன், சோவியத் ரஷ்யா அணு ஆயுதத்தை வெடித்து சோதனை நடத்தியதாக அமெரிக்க அணுசக்திக் குழு தெரிவித்திருக்கிறது.

கடந்த 8 திங்களில் ரஷ்யா ஐந்தாவது முறையாக அணு ஆயுதத்தை வெடிக்க வைத்திருப்பதாக அமெரிக்க அறிக்கையில் காணப்படுகிறதாம்.

மின்சார உற்பத்தி

பெரியாறு திட்டத்தில் மாறுதல்

செலவுத் தொகை கூடுதலாகாது

பெரியாறு மின்சாரத் திட்டத்தில் ஒவ்வொன்றும் 35,000 கிலோவாட் வீதம் 3 'யூனிட்'கள் ஏற்படுத்தவேண்டும் என்ற சென்னை சர்க்காரின் யோசனையை திட்டக் குழு ஏற்றுக்கொண்டுவிட்டதாகக் கூறப்படுகிறது.

இதன்படி துவக்கத்திலேயே 3 'யூனிட்'களிலும் 35,000 கிலோவாட் வீதம் உற்பத்திக்கு ஏற்பாடு செய்யப்படுமாம். ஒவ்வொரு 'யூனிட்'டும் 25,000 கிலோவாட் மட்டுமே உற்பத்தி சக்திகொண்டதாக இருக்கவேண்டும் என்பது முன்னைய ஏற்பாடு.

இரண்டாம் திட்ட காலத்தில், இத்திட்டத்திற்காகச் செலவிடுவதற்கென பூர்வாங்கமாக ஒதுக்கப்பட்ட ரூ. 7·38 கோடி இந்தப் புதிய ஏற்பாட்டின் மூலமாகப் பாதிக்கப்படமாட்டாதாம்; அதாவது, மின்சார உற்பத்தி சக்தியை அதிகரிப்பதற்கான ஏற்பாட்டிற்காக அதிகப் பணம் ஒதுக்கப்படமாட்டாதாம்.

வைத்தியர்களின் பொறுப்பு

நோய்க்கு சிகிச்சை செய்வது மட்டுமல்ல!

"தற்போதைய கல்வி முறையானது—வைத்தியக் கல்வி உட்பட மனிதப் பண்புகளையும், திறமைகளையும் பூரணமாகப் பெற்று முழு வளர்ச்சியடைவது சம்பந்தமாக அதிகக் கவனம் செலுத்தவில்லை; மனம், புத்தி, உள்ள உணர்ச்சிகள் ஆகியவை எல்லாம் உச்ச திறமையுடன் ஒழுங்குபடச் செயலாற்றக் கூடியபடி அது வழி செய்யவில்லை. தான் வேலை செய்கிற சூழ்நிலைக்குப் பொருந்திய முறையில் ஒருவர் பணியாற்றினால் தான், வெற்றி சாத்தியமாகும். முக்கியமாக டாக்டர்கள் மனிதச் சூழ்நிலையில் செயலாற்ற வேண்டியவர்கள்; அதற்கான சில பண்புகள் அவர்களிடம் இருக்க வேண்டும்.

"நோய்க்கு சிகிச்சை செய்வது மாத்திரம்தான் டாக்டர்கள் பொறுப்பு என்ற நிலை மாறி, மக்களின் தேக திடத்தையும், நலத்தையும் அபிவிருத்தி செய்வதும் அவர்களின் பொறுப்பு என்று ஆகி வருகிறது. மனிதன் திடதேகியாயிருந்தாலும், ரோகியாயிருந்தாலும் அவன் மனித சமூகத்தின் ஒரு உறுப்பாக விளங்குகிறான். எனவே, சமூகத்தின் ஒரு இன்றியமையாத அங்கம் என்ற முறையில் அவனுக்கு அக்கரையோடு கூடிய பராமரிப்பு அளிப்பது அவசியம்.

"நோய் ஏற்பட்டால், அவன், தேகச் சூழ்நிலைக்கும், சமூகச் சூழ்நிலைக்கும் பொருந்தாதபடி இருக்கிறான் என்றுதான் அர்த்தம்; அதில் ஏதோ கோளாறு ஏற்பட்டிருக்கிறது என்றுதான் ஆகிறது. அதனால் அவனை அந்தச் சூழ்நிலைக்கும் பொருந்தும்படி அமைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்.

"ஒரு நோயாளி, வியாதி பீடித்த உறுப்புக்களின் தொகுதி சேர்ந்த ஒரு பிண்டம் மாத்திரம் அல்ல; அவன் ஒரு மனிதன்—சமூகத்தில் ஒரு இடம் பெற்றுள்ள உறுப்பினன் என்பதை டாக்டர்கள் உள்ளூர உணரும்படி செய்வதும், நோயைக் கண்டுபிடித்து அதற்கு சிகிச்சை செய்வது விஷயத்தில், இந்த உண்மையை அவர்கள் முக்கியமாகக் கவனிக்கும்படி செய்வதும்தான் சமூக வைத்தியக் கல்வியின் பிரதான பொறுப்பாகும்,"

என்று, மத்திய சுகாதார அமைச்சர் ராஜ்குமாரி அமிர்த கௌர், அமிர்தசரஸ் மருத்துவக் கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் பேச்சையில் கூறியுள்ளார்.

'பதிவுத் திருமணம்

22—3—56 காலை 8-30 மணியளவில், சென்னை—வெள்ளாளத் தேனாம்பேட்டை, முத்தையா முதலித் தெரு, எண் 37 இல்லத்தில், தோழர் அ. பொ. அரசு எம். பி. அவர்கள் தலைமையில் தோழர் ஏ பாலகிருட்டிணன்—தோழியர் சரசுவதி பதிவுத் திருமணம் நடைபெற்றது. தோழியர் அலமேலு-அப்பாதுரை, தோழர் ஆடலழகன் வாழ்த்துரை வழங்கினர்.

அன்பளிப்பு

15—3—56-ல் ஆலங்குடியில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில், 'நம் நாடு' வளர்ச்சிக்காக தோழர் கே. மாரியப்பன் மூலம் ரூ. 2—9—0-ம், தோழர் ஜி. கணபதி மூலமாக ரூ 1—1—3-ம் தஞ்சை மாவட்டச் செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள் மூலமாக வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

பெயர் சூட்டல்

18—3—56-ல், கோவையில், அண்ணா அவர்களால், தோழர் அங்கப்பன் அவர்களின் ஆண் மகவுக்கு 'செங்குட்டுவன்' எனப் பெயர் சூட்டப்பட்டதின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமை நிலையச் செய்தி:

மாநில மாநாடு

பந்தல் அமைப்பு — 'ஸ்டால்' ஏற்பாடுகள்

மே—17, 18, 19, 20 ஆகிய தேதிகளில் திருச்சியில் நடைபெறவிருக்கும் தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டுக்கான பந்தல் அமைத்தல், 'ஸ்டால்'களை வாடகைக்கு விடுதல் ஆகிய ஏற்பாடுகளைக் கவனித்து ஆவன செய்ய மார்ச் 31, ஏப்ரல் 1, 2 ஆகிய தேதிகளில், அண்ணா, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் ஆகியோர் திருச்சியில் தங்கியிருந்து, வரவேற்புக் குழுத் தலைவர் அன்பில்-தர்மலிங்கம், செயலாளர் எம். எஸ். மணி, எஸ். முத்து உள்ளிட்ட மற்ற நிர்வாகிகளுடன் கலந்து முடிவு செய்வார்கள்.

ஏப்ரல் 1-ந் தேதி—பந்தல் அமைப்பது பற்றியும், 2-ந் தேதி—ஸ்டால்கள் வாடகைக்கு விடுவது பற்றியும் முடிவு செய்துவிடப்படும்.

எனவே, பந்தல் அமைக்க விரும்புவோரும், 'ஸ்டால்கள் வாடகைக்கு வேண்டுவோரும், முன்னதாகவே வரவேற்புத் தலைவர் அன்பில்-தர்மலிங்கம் அவர்களுடன் (9, கில்லேதார் தெரு, தெப்பக்குளம், திருச்சி) தொடர்புகொள்ள வேண்டுகிறோம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

அருமையான காரணம்! அற்புதமான விளக்கம்!

ஆவடியில் தொழிற்சாலை அமையாததேன் தெரியுமா?

வெப்பம் அதிகமாம்! நிலம் நீர்க் கசிவு உள்ளதாம்!

'நிபுணர்கள்' அப்படிக் கருதுகின்றனராம்!

தென்னாட்டிற்கு இழைத்துவரும் அநீதிக்கு டெல்லி தரும் விளக்கம்

தென்னாட்டில்—சென்னையில், பெரும் தொழிற்சாலைகளை டெல்லி சர்க்கார் ஏன் நிறுவவில்லை, தெரியுமா?

டெல்லி சர்க்கார் தெரிவிக்கிறது, தெரிந்துகொள்ளுங்கள்!

கனரக மின்சார சாதனத் தொழிற்சாலை சென்னைக்கு அருகே ஆவடியில் அமையும் என்று கூறிவந்தார்கள் அல்லவா? சென்னை சர்க்கார்கூட, டெல்லி எஜமானர்களைக் காப்பாற்றுவதாகவும், தென்னாடு—வடநாடு என்று பிரித்துப் பேசுவோரின் வாயை மூடுவதாகவும் எண்ணிக்கொண்டு, 'பாருங்களேன்; ஆவடியில்தான் கனரக மின்சார சாதனத் தொழிற்சாலை அமையப்போகிறது' என்று கூறினர்களல்லவா?

'அந்தத் தொழிற்சாலை ஆவடியில் இல்லை; போபாலில் அமையப்போகிறது' என்று செய்தி வந்தது.

அதைத் தொடர்ந்து இப்போது, 'ஏன் அந்தத் தொழிற்சாலை சென்னையில் அமையவில்லை; போபாலில் அமைகிறது' என்பதற்கான காரணம் (!) கூறுகிருர்கள்—டெல்லி சர்க்கார்!

சென்னை, மிக உஷ்ணமான பிரதேசமாம்! பெரும்பாலான நாட்களில் வெப்பம் அதிகமாம்! மேலும், பூமியும் நீர்க் கசிவு உடையதாம்! சதுப்பு நிலமாம்! அதனுல்தான் ஆவடியில் அந்தக் கனரக மின்சார இயந்திரத் தொழிற்சாலை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்க முடியவில்லையாம்!—அப்படி என்று நிபுணர்கள் தெரிவிக்கிருர்களாம்!

ஆவடியில் தொழிற்சாலை அமைந்தால் தொழிற்சாலைக்கே தீங்கு—ஆபத்து ஏற்பட்டுவிடுமாம்! அதுவும் நிபுணர்கள் கருத்துத்தானும்!

டெல்லி சர்க்கார், இவ்வாறெல்லாம் தகவல் தந்திருக்கின்றனர். இப்போது தெரிந்து கொண்டீர்களா? ஏன் தொழிற்சாலைகள் தென்னாட்டில் அமையவில்லையென்பதை!

★

இராகவன் நினைவுநாள்

★

சென்னை - திருவல்லிக்கேணி: பண்டி வெங்கடேசநாய்க்கன் தெரு — சுக்கைகொண்டான் மண்டபம் அருகில்

25—3—56 மாலை 6 மணிக்கு

தலைவர்:
பூ. அரங்கசாமி

பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
க. அன்பழகன்
இளம்பரிதி

சென்னை 44-வது வட்டத் தி. மு. கழகத் தோழர்கட்கு:

24—3—56 இரவு 8½ மணிக்கு, கழகப் பணிமனையில் செயற் குழு உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

திருவள்ளுவர் முன்னணிக் கழகம்

25—3—56 மாலை 7 மணியளவில், சென்னை—பழைய வண்ணையம்பதி, 15, நாகப்பநாய்க்கன் தெரு கழகப் பணிமனையில், தோழர் மு. க. தமிழ்தம்பி தலைமையில் 'சொல்லும் - செயலும்' எனும் பொருள் பற்றி கழகத் தோழர்களும், மன்றத் தோழர்களும் பேசுவர்.

சொற்பயிற்சிக் கூட்டம்

25—3—56 காலை 10 மணிக்கு சென்னை 4/88-ஏ பிராட்வே ரோடிலுள்ள தி. மு. கழகப் பணிமனையில், காஞ்சி-மணிமொழியார் தலைமையில், 'பொருளாதாரம்' என்பது பற்றி சொற் பயிற்சிக் கூட்டம் நடைபெறும்.

சென்னை அறிவியக்க மன்றம்

25-3-56 காலை 10 மணிக்கு 27-வது வட்டம்—பூக்கா நகர், எண் 33, ஏலா சந்தப்பன் தெருவில் அமைந்துள்ள அறிவியக்க மன்றத்தில், தோழர் இமய வரம்பன் தலைமையில் 'மறுமலர்ச்சி' என்னும் பொருள் பற்றிப் பலர் பேசுவர்.

காங்கிரஸ் கோஷ்டிச் சண்டையின் எதிரொலி!

திரு-கொச்சியில் குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனம்

திரு-கொச்சி மாநில சட்டசபை கலைக்கப்பட்டு, குடியரசுத் தலைவர் ஆட்சி—அரசியல் சட்ட விதி 356-ம் பிரிவுப்படி பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது.

"இப்போதைய குழம்பிய நிலையில், மாநிலத்தில் ஒரு நிலையான சர்க்கார் அமைப்பது சாத்தியமாயில்லை"

என்று, திரு-கொச்சி இராஜப்பிரமுகர் இந்திய சர்க்காருக்கு அறிவித்ததின் பேரில், மத்திய சர்க்கார் மந்திரி சபையினர் அது குறித்து விவாதித்துவிட்டு, பின்னரே குடியரசுத் தலைவரின் நேரடி ஆட்சிப்பிரகடனத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

சட்டசபை கலைக்கப்பட்டு குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்படுவது, இது இரண்டாம் முறையாகும்.

புதிய கேரள மாநிலம், வரும் அக்டோபர் திங்களில் உருவாக இருப்பதால், இந்தியாவெங்கும் பொதுத் தேர்தல் நடைபெறும் போதே திரு-கொச்சியிலும் தேர்தல் நடைபெறும் என்று கூறப்படுகிறது.

குடியரசுத் தலைவரின் பிரதிநிதியாக இராஜப்பிரமுகருக்கு ஆலோசனை கூற பி. எஸ். ராவ் என்பார் நியமிக்கப்படுவார் என்று தெரிகிறது.

★

'தவிர்க்க முடியாதது நடைபெற்றுவிட்டது'

திரு—கொச்சியில் குடியரசுத் தலைவரின் நேரடி ஆட்சிக்கான பிரகடனம் குறித்து, முன்னுள் முதன் மந்திரி பனம்பள்ளி கோவிந்த மேனன் கருத்தறிவிக்கையில், 'தவிர்க்க முடியாதது நடந்தேறியுள்ளது' என்று குறிப்பிட்டாராம்.

"இந்த நிலை இப்போது ஏற்பட்டதற்காகக் காங்கிரஸ் கட்சி மிக வருந்துகிறது. ஆனுல், நான் எதையும் நம்பிக்கையோடு எதிர்நோக்குபவன். பொறுப்புள்ள சர்க்கார் அமையும் நன்னுள் சீக்கிரமே பிறக்கும் என நம்புவோம்," என்ருர் பனம்பள்ளி.

"எந்தவிதக் காரணமுமின்றி கட்சிக்கு எதிராகத் திரும்பிவிட்ட ஆறு காங்கிரசார் உள்ளிட்ட எதிர்க் கட்சியினரின் பொறுப்பில்லாப் போக்கினுல் ஏற்பட்ட நேரிடையான விளைவுதான், குடியரசுத் தலைவர் ஆட்சிப் பிரகடனம்,"

என்று வேறு குற்றம் சாட்டினுராம், கோவிந்தமேனன்!

சுதந்திரம் பெறும் வேளையில்

70 டுனீஷியர்கள் கொலையுண்டனர்

டுனீஸ் மார்ச் 23—

டுனீஷியாவிற்கு சுதந்திரம் வழங்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுவிட்டு வெற்றி வாகை சூடிக்கொண்டு தேசியத் தலைவரான ஹபீப் பர்கீபா, பாரிசிலிருந்து நாடு திரும்புகிற அதே நேரத்தில், டுனீஷிய சுதந்திரத்திற்காகப் போராடும் வீரர்கள் 70 பேர் வரை இராணுவத்தாருடன் மோதிக்கொண்டபோது சுட்டுக் கொல்லப்பட்டதாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

கடந்த மூன்றாண்டுகளில் நிகழ்ந்த சண்டைகளில் எல்லாம் இதுவே மிகவும் கடுமையானது என்று கூறப்படுகிறது.

கடந்த மார்ச் 7-ந் தேதியிலிருந்தே புரட்சிக்காரர்கள் தங்களின் தீவிர நடவடிக்கைகளைக் கைவிட்டு விட்டதாகத் துண்டறிக்கை ஒன்று வெளியிடப்பட்டதாம்.

'விடுதலை இராணுவம்' என்று கையொப்பமிடப்பட்டிருந்ததாம்—அந்தத் துண்டறிக்கைகளில்!

'நடைபெற்ற பலாத்காரச் செயல்களுக்கெல்லாம் பொறுப்பாளிகள் புரட்சிக்காரர்கள் அல்ல' என்றும் அந்தத் துண்டு அறிக்கைகள் கூறிற்ரும்.

பாகிஸ்தான் குடியரசாக மலர்ந்தது

உலகத்தவர் பலரின் நல்வாழ்த்துக்கள்

இஸ்கந்தர் மீர்சா முதல் குடியரசுத் தலைவர்

கராச்சி, மார்ச் 23—

பாகிஸ்தான் இன்று, உலகின் முதல் இஸ்லாமியக் குடியரசாக மலர்ந்துள்ளது.

மேஜர் – ஜெனரல் இஸ்கந்தர் மீர்சா முதல் குடியரசுத் தலைவராக பதவி ஏற்றுக்கொண்டுள்ளார்.

பாகிஸ்தானின் தலைமை நீதிபதி, மீர்சாவிற்கு பதவிப் பிரமாணம் செய்வித்திருக்கிறுர்.

பதவி ஏற்பு வைபவம் கவர்னர்-ஜெனரல் மாளிகையில், 31 துப்பாக்கிக் குண்டுகளின் முழக்கத்திடையே நடைபெற்றிருக்கிறது.

குடியரசு தின விழாவை ஒட்டி சுமார் 1,000 சிறைக் கைதிகள் வரை விடுதலையளிக்கப்பட்டிருக்கின்றனர்.

40 பேருக்கு, நிறைவேற்றப்பட விருந்த தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

கடந்த திங்களில் மேற்கொள்ளப்பட்ட புதிய அரசியல் சட்டப்படி, பாகிஸ்தான் இன்று முதல், 'பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசு' என்று அழைக்கப்படுகிறது.

குடியரசாக உருவம் பெற்றுவிட்டாலும், இந்தியாவைப்போல, தொடர்ந்து காமன்வெல்த் உறவினையும் பாகிஸ்தான் வைத்துக்கொண்டிருக்கும்.

அரசியல் நிர்ணய சபை, காலவரையறை இன்றி ஒத்திவைக்கப்படுமுன்பாக எல்லா உறுப்பினர்களும், அரசியல் சட்டத்தின் விசேட பிரதி ஒன்றில் கையொப்பமிடுவது என்ற தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருக்கிறது.

பாகிஸ்தான் குடியரசாக மலருவதை ஒட்டி நாடெங்கும் கோலாகலமான விழாக் கொண்டாட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன.

வெளிநாடுகளில் உள்ள பாகிஸ்தான் தூதுவராலுவலகங்களில் எல்லாம் கொடியேற்றல், விருந்து, விழா நடவடிக்கைகள் விமரிசையாக நடைபெற்றிருக்கின்றன.

புதுடில்லியில் உள்ள பாக். தூதுவராலுவலகத்திலும் சிறப்பாகக் குடியரசுத் துவக்க விழாக் கொண்டாட்டம் நடத்தப்பட்டிருக்கிறது.

பாகிஸ்தான் குடியரசாக மலர்வதில் மகிழ்ச்சி தெரிவித்தும், மனநிறைவை வெளிக்காட்டியும் உலகின் பல நாட்டவரும் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருக்கின்றனர்.

இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் இராசேந்திரபிரசாத், பிரதமர் நேரு ஆகியோரும் தங்கள்

(தொடர்ச்சி 5-ம் கலம் பார்க்க)

ஆவலோடு எதிர்பார்த்தோம்! ஆனுல் நிபுணர் கருத்து வேருகிவிட்டதே!

அமைச்சர் பக்தவத்சலம் பிரலாபம்

"மிக முக்கியமான தொழிற்சாலையான கனரக மின்சார இயந்திரத் தொழிற்சாலை ஆவடியில் அமையும் என நாம் நம்பிக்கையோடு எதிர்பார்த்துக் கோண்டிருந்தோம்; ஆனுல், நிபுணர்கள் கருத்து, வேறுவிதமாக அமைந்துவிட்டது. சில புள்ளி விவரங்களின் அடிப்படையில் சென்னையோ, மைசூரோகூட அந்தத் தொழிற்சாலை அமைக்கத் தகுதியானவை அல்ல என்று நிபுணர்கள் கருத்தறிவித்து விட்டனர்.

"சுமார் 10 ஆயிரம் பேருக்கு மேல் வேலை பெறக்கூடிய வாய்ப்புகள் கோண்ட அந்தப் பெரிய கனரகத் தொழிற்சாலை நமது மாநிலத்தில் அமையாது போய்விட்டது,"

என்று, மேல் (சட்ட) சபையில் பக்தவத்சலம் கூறியிருக்கிருர்.

மீண்டும் ஆசை வார்த்தை கூறுகிருர்!

"மத்திய சர்க்காரின் தீவிரமான ஒத்துழைப்புடன் சென்னை சர்க்கார், சேலத்தில் கிடைக்கும் பாக்சைட், மற்றும் இரும்புக் கனிகளை உபயோகித்து, பெரும் தொழிலைத் துவங்க முடியும் என்று நம்புகிறேன். வேறு சில கனரகத் தொழில்களை நிறுவவும் சென்னை சர்க்கார் முயற்சித்து வருகிறது. எல்லாம், நமக்குக் கிடைக்கிற மூலப் பொருள்களை மட்டுமின்றி இதர் சில அம்சங்களையும் பொறுத்ததாகும்."

என்று, மீண்டும் ஆசை வார்த்தை கூறுகிற வேலையில் ஈடுபட்டிருக்கிருர், மந்திரி பக்தவத்சலம், மேல் சபையில்!

தங்கவயல் சுரங்கத்தில் விபத்து

கோலார் தங்கவயலில், சாம்பியன் ரீப் சுரங்கத்தில் ஏற்பட்ட விபத்து ஒன்றில் மூன்று தொழிலாளர்கள் பலியானதாயும், மூன்று பேர் படுகாயமுற்றதாயும் தகவல் கிடைத்திருக்கிறது.

மூன்று பேர்கள் மட்டுமே விபத்து நடைபெற்ற 6,000 அல்லது 7,000 அடி ஆழத்திலிருந்து உயரே கொண்டுவரப்பட்டிருக்கிருர்கள் என்றும், பாறை இடிந்து விழுந்ததினுல், அதற்கு அடியில் வரப்படும் என்றும் தெரியவருகிறது.

புதைந்துவிட்ட மூவரின் சடலங்கள் நாளைத்தான் வெளிக்கொண்டு

சென்ற மாதம் இதுபோன்ற ஒரு விபத்து ஏற்பட்டதாம்; ஆனுல் அப்போது, சுரங்கத்திற்குள் எவரும் இருக்கவில்லையாம்!

(2-ம் கலத்தின் தொடர்ச்சி)

வாழ்த்துக்களை அனுப்பி உள்ளனர்.

குடியரசுத் தலைவராகியபின், இஸ்கந்தர் மீர்சா, கராச்சி வானொலியில் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"பாகிஸ்தான், எல்லோரிடத்திலும் நண்பனுகவே இருக்கும். எவருக்கும் விரோதியாகவிருக்க விரும்பாது.

"தாயகத்தில், சிறுபான்மையினரிடத்தில் அன்போடு, நியாயமாக நடந்து கொள்வோம். ஏழ்மை, இல்லாமை, அச்சம் இவற்றிலிருந்து எல்லோருக்கும் விடுதலை வழங்குவோம்."

பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகளும், பாகிஸ்தான் குடியரசுத் துவக்க விழாவில் கலந்துகொண்டு தங்கள் நல்லெண்ணத்தையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டிருக்கிருர்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ